# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் டில்லியிலுள்ள பைத்துல் ஹாதி பள்ளிவாசலில்
## 05.12.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் பல்வேறு விருப்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரது மூளை, உடலிலுள்ள ஆற்றல், அறிவு, பொருளாதார நிலை, சமுதாய செல்வாக்கு ஆகியவற்றிற்கு ஏற்ப அவர்களது ஆசைகளும் பல்வேறு விதமாக இருக்கும். ஆனால், முழுமையான ஈமானுள்ள ஒரு மூஃமினுக்கும் இறைவன் மீது முழுமையான நம்பிக்கையுள்ள மக்களுக்கும் அவர்களது ஒவ்வொரு பணியும், ஒவ்வொரு விருப்பமும், ஒவ்வொரு துன்பமும், ஒவ்வொரு இன்பமும் ஆகிய இந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் இறைவனது பக்கமே கவனம் செலுத்தக்கூடியவர்களாக அவர்கள் இருப்பார்கள். அவ்வாறு இருக்கவும் வேண்டும். அப்போதுதான் ஒரு மனிதன் மூஃமின் என்று அழைக்கப்படவும் முடியும். அப்போதுதான் அந்த மனிதன் தனது ஈமானில் முன்னேற்றம் அடைந்துள்ளார் என்று நம்மால் கூற முடியும். அப்போதுதான் அந்த மனிதர் இறைவனை வணங்குகின்ற அடியார் என்று நம்மால் கூற முடியும். ஒவ்வொரு சிறிய சிறிய விருப்பத்தையும் நிறைவேற்றுவதற்காக இறைத்தூதரின் கூற்றுக்கேற்ப 'Shoe-ன் கயிறு வேண்டுமென்றாலும் அதை இறைவனிடம் கேளுங்கள்' என்று கட்டளைக்கேற்பவே அவர் செயல்படுவார். ஏனென்றால், அதில் இறைவனின் விருப்பம் இல்லையென்றால் பையில் பணம் இருந்தாலும் அதை எடுத்துக்கொண்டு பஜார் வரை சென்ற பிறகும் பஜாரில் Shoe -ன் கயிறு கிடைக்கக்கூடிய கடையில் நுழைந்த பிறகும் அந்த Shoe-ன் கயிறை வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடலாம். அந்தக் கயிறை வாங்க முடிந்தாலும் அதை பயன்படுத்த முடியாமல் ஆகி விடலாம். எனவே, ஒவ்வொரு சிறிய சிறிய பொருளுக்காகவும் அல்லாஹ்வின் பக்கம் குனிவது ஒரு மூஃமினுக்கு மிகவும் அவசியமானதாகும். அவனது அருளை வேண்டியவாறு அந்தப் பொருளைப் பெறுவதற்காக அல்லது தனது விருப்பம் நிறைவேறுவதற்காக மனிதன் முயற்சி செய்ய வேண்டும். அஹ்மதிகளாகிய நம் மீது அல்லாஹ்வின் மாபெரும் அருள் இருக்கின்றது. நான் அதிகமாக இது தொடர்பாக பல விஷயங்களைக் கூறியுள்ளேன். அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான தவ்ஃபீகை வழங்கியுள்ளான். அவர்கள் அல்லாஹ் பற்றி முழுமையான ஞானத்தை ஜமாஅத்திலுள்ளவர்கள் பெற வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்தார்கள். அதைப் பற்றி ஜமாஅத்தைச் சார்ந்த மக்களுக்கு கவனமூட்டியுள்ளார்கள். இன்னும் சொல்வதென்றால் இறைவனை எப்படி அறிந்து கொள்ள முடியும் என்பதை விளக்கி அந்த உணர்வை ஜமாஅத்தில் அவர்கள் உருவாக்கினார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்:**

இறைவனது கட்டளைகளை நிறைவேற்றிச் செயல்படுபவர்களையே அல்லாஹ் நேசிக்கின்றான் என்பதையும் அத்தகையவர்களது சந்ததிகளே அருளுக்குரியவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் உண்மையாகவே உங்களுக்கு கூறிக்கொள்கின்றேன். இறைவனுக்கு முழுமையாகக் கீழ்படிந்து நடப்பவர் அல்லது அத்தகையவரது சந்ததிகள் அழிந்து நாசத்திற்கு ஆளாவார்கள் என்பது ஒருபோதும் நடைபெறாத ஒன்றாகும். இறைவனை கைவிட்டு விடுபவர்களது உலகம்தான் அழிந்து விடுகிறது. அவர்கள் உலகின் பக்கமே குனிகின்றார்கள். ஒவ்வொரு விஷயத்தின் கடிவாளமும் அல்லாஹ்வின் கைகளில்தான் உள்ளது என்பது உண்மை இல்லையா? அந்த இறைவனின் உதவி இல்லாமல் எந்த வழக்கிலும் நமக்கு வெற்றி கிடைக்காது.

எந்த வெற்றியையும் நாம் பெறவும் முடியாது. எவ்வித இன்பமும், சுகமும் நமக்கு கிடைக்காது. ஒரு மனிதரிடத்தில் செல்வம் இருக்கலாம். ஆனால் அவர் மரணித்த பிறகு அந்த செல்வம் மனைவி மக்களுக்கு பயன்படும் என்று யாரால் கூற முடியும்?

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“அல்லாஹ் மறைவாக இருக்கின்றான். ஆனால், அவன் தனது ஆற்றல்கள் மூலமாக அறியப்படுகின்றான். துஆவின் மூலமாக அந்த இறைவனின் இருப்பு பற்றி நமக்கு தெரிய வருகிறது. ஒருவர் அரசராக இருந்தாலும் அல்லது பேரரசராக இருந்தாலும் ஒவ்வொரு நபருக்கும் அவர்களது வாழ்வில் எத்தகைய துன்பங்கள் வருகின்றன என்றால் மனிதனால் அப்போது எதுவுமே செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்பதே அவனுக்கு தெரியாது. அப்போது துஆக்கள் மூலமாக துன்பங்கள் அவனை விட்டும் விலகி விடும்.”

இந்த அறிவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது ஜமாஅத்தில் உருவாக்கி இருக்கின்றார்கள். எல்லா நிலைமைகளிலும் இறைவனை நினைவில் வைக்க வேண்டியது அவசியமானதாகும். அவன்தான் எல்லா துன்பங்களையும் அகற்றக்கூடியவனாக இருக்கின்றான். அவனே தனது அடியார்களுக்கு சரியாக வழிகாட்டுபவனாக இருக்கின்றான்.

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றோம். ஜமாஅத்தில் பெரும்பாலார் இந்த விஷயத்தைப் புரிந்து செயல்படுகின்றார்கள். துன்பங்கள் ஏற்படும் போதும் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்படும் போதும் அவர்கள் இறைவன் முன்னால் குனிகின்றார்கள். இது ஒவ்வொரு மூஃமினின் செயலாகும். அவர் படைக்கப்பட்டதன் நோக்கமே இறைவனை வணங்குவதாகும். ஆனால் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் இறைவணக்கத்தின் பக்கம் அதிகம் கவனம் ஏற்படுகின்றது. அப்போது அல்லாஹ்ன் சிறப்பான அருள் கிடைப்பதற்குரிய காரணம் என்னவென்றால் சாதாரணமான பொதுவான சந்தர்ப்பங்களிலும் சூழ்நிலைகளின் போதும் ஒரு மூஃமின் இறைவனை வணங்குவதன் பக்கம் கவனம் செலுத்தக்கூடியவராக இருப்பார்.

ஒரு மூஃமினுக்கும் விருப்பங்கள் இருக்கும். ஆனால், தனது அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அவர் இறைவன் பக்கம் குனிகின்றார். அவ்வாறு குனியவும் வேண்டும். ஏனென்றால், இறைவன்தான் எனது விருப்பங்களை நிறைவேற்றுவான் என்பது அவருக்கு தெரியும். ஒவ்வொரு பணியிலும் இறை திருப்தி கிடைப்பதுதான் எனது வாழ்வின் நோக்கமாக இருக்கின்றது என்றே ஒரு மூஃமின் கருதுகின்றார்.

தனது அன்றாட வாழ்க்கையில் தான் செய்கின்ற பணிகளிலும் அல்லது வியாபாரம் தொடர்பான விஷயங்களிலும் அல்லது மார்க்கத்துடன் தொடர்புடைய ஜமாஅத்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட சூழ்நிலைகளின்போதும் ஒவ்வொரு பணியைச் செய்வதற்கு முன்னரும் இறைவன் மீது முழுமையான நம்பிக்கையுள்ள ஒரு மூஃமினுக்கு இறைவன் முன் குனிவதன் பக்கம் கவனம் இருக்கும். அதன் மூலம் அல்லாஹ் அந்த பணியில் அருள் புரிகின்றான். அந்த பணியின் மூலம் நல் விளைவுகளை ஏற்படுத்துகின்றான். சில நேரங்களில் ஒரு மனிதன் ஒரு பணியைச் செய்யும்போது அது நல்லது என்று கருதுகின்றான். அந்தப் பணியும் நன்மையான பணியாகத்தான் இருக்கும். எனவே, இந்தப் பணியின் மூலம் நல் விளைவுகளே வெளிப்படும் என்று அவன் நினைக்கின்றான். தனது விருப்பம் நிறைவேறுவதற்காக அவன் முயற்சி செய்கின்றான். ஆனால் அல்லாஹ்வின் பார்வையில் அந்தப் பணி சிறந்ததாக இல்லாமல் இருந்தால் பிறகு அல்லாஹ் தனது அடியானின் நன்மைக்காக அதில் தடையை ஏற்படுத்தி விடுகின்றான். அந்த சமயத்திற்காகவோ அல்லது நிரந்தரமாகவோ அப்பணி நிறைவேறாமல் தடுத்து விடுகின்றான். சில நேரங்களில் துஆக்கள் செய்து சதகா கொடுத்த பிறகும் ஒரு மூஃமின் ஒரு பணியைச் செய்ய முற்படும்போது

அல்லாஹ் அந்த மூஃமினுக்கு அல்லது அவருக்கு நெருக்கமானவர்களுக்கு அல்லது ஜமாஅத் ரீதியிலான விஷயமாக இருந்தால் ஜமாஅத்திலுள்ள அதிகமான நபர்களுக்கும் அந்தப் பணி அந்த குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நடக்காது என்பதைப் பற்றியும் அல்லது அது தொடர்பாக இருக்கின்ற தடைகள் பற்றியும் தகவல் தெரிவித்து விடுகின்றான். அந்தப் பணியைத் தொடங்குவதற்கு முன்பே அதைப் பற்றி இறைவன் தெரிவித்து விடுகின்றான். ஆனால், மனிதன் அதற்குப் பிறகும் கூட தனது அனுமானத்திற்கு ஏற்ப அதைச் செய்வதில் பிடிவாதமாக இருக்கின்றான். அதன் விளைவாக அந்தப் பணியும் அவனது விருப்பத்திற்கு ஏற்ப அமையாது. ஆனால், அந்த மூஃமினும் களங்கமற்ற நல்ல மனிதராக இருப்பார். அவரது பணியும் நன்மையானதாகத்தான் இருக்கும். அதற்குப் பிறகு வெளிப்படும் சூழ்நிலையானது இந்த உண்மையை அவருக்கு வெளிப்படுத்திக் காட்டி விடும். அதாவது அல்லாஹ்வின் தீர்ப்பு இதுதான். அதில்தான் அருள் இருக்கின்றது என்பதை அவர் புரிந்து கொள்கின்றார். இந்தப் பணி நடைபெறுவதற்கான சூழ்நிலை தற்போது உருவாகுவதை இறைவன் விரும்பவில்லை என்பதை அவர் தெரிந்து கொள்கின்றார்.

நீங்கள் சில பணிகளை அது உங்களுக்கு சிறந்தது என்றும் நன்மைக்கு காரணமனது என்றும் கருதுகின்றீர்கள். ஆனால், அல்லாஹ்வின் பார்வையில் அந்தப் பணியில் நன்மை இருக்காது. அல்லது அந்தப் பணியை அல்லாஹ் தற்காலிகமாக தடை செய்து விடுகின்றான் என்ற அடிப்படையான இந்த விஷயம் தொடர்பாக அல்லாஹ் கூறியுள்ளான். திருக்குர்ஆனில் இந்த விஷயத்தை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

**வ அஸா அன் தக்ரஹூ ஸய்யவ்வஹூவ கைருல்லகும் வ அஸா அன் துஹிப்பூ ஸய்யவ்வஹூவ ஷர்ருல்லகும். வல்லாஹு யஃலமு வ அன்தும் லா தஃலமூன்** - நீங்கள் வெறுக்கக்கூடிய ஒன்று உங்களுக்கு நல்லதாகஇருக்கலாம். நீங்கள் விரும்பும் ஒன்று உங்களுக்கு தீயதாக இருக்கலாம். அல்லாஹ் அறிகின்றான். நீங்கள் அறிவதில்லை. (2:217)

இந்த அடிப்படையான விஷயம் தொடர்பாக அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளான். மனிதனின் அறிவு ஒரு எல்லைக்கு உட்பட்டதாக இருக்கின்றது. சில நேரங்களில் அவன் தனக்கு நல்லது என்று தெரிகின்றவற்றை அல்லாஹ்விடம் கேட்கின்றான். உண்மையில் அது நல்லதாகவும் இருக்கலாம். அதனால் அந்த மனிதனுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்பதையும் அவன் பார்க்கின்றான். அதை அடைவதற்காக அவனது உள்ளத்திலுள்ள விருப்பமும் மிக அதிகமாக இருக்கும். அந்தப் பணியை எப்படியாவது நிறைவேற்றுவதிலிருந்தும் தனது ஆசை முழுமையாக நிறைவேறுவதிலிருந்தும் தான் புறக்கணிக்கப்படுவதை அவனால் சகித்துக் கொள்ள முடியாது. ஆனால், இந்தப் பணி நடப்பதால் அவனுக்கு இழப்பும் ஏற்படலாம் என்பது அவனுக்குத் தெரியாது. அல்லது அந்தப் பணி நடைபெறும் அந்த சமயத்தில் அதனால் கிடைக்கும் பலனை விட சிறிது காலம் கழிந்து அது நடைபெறும்போதுதான் அதில் அதிக பலன் இருக்கின்றது என்பது அவனுக்குத் தெரியாது.

ஒரு பணி நடைபெறுவதற்கு முன்னால் அதற்காக ஒரு மனிதரிடம் இருந்து வெளிப்படும் எண்ணம் எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால் ஒன்று அந்தப் பணி நிறைவேறுவதை அவன் மிகவும் விரும்புகின்றான். அல்லது அந்தப் பணியை அவன் மிகவும் வெறுக்கின்றான்.

எப்போதும் முன்னேறிச் செல்ல வேண்டும். நல்லவற்றைப் பெற்றுக் கொண்டே செல்ல வேண்டும் என்ற விருப்பம் அவனிடம் இருக்கின்றது. பொதுவான சூழ்நிலையில் இந்த விருப்பம் ஏதாவதொரு தனது எதிரியை தோல்வியடையச் செய்து அவரை தாழ்ந்த நிலையில் காட்ட வேண்டும் என்பதற்காக இருந்தாலும் எப்படியாவது தனது விருப்பத்திற்கேற்ப அது நடந்துவிட வேண்டும் என்றுதான் மனிதன் நினைக்கின்றான். அதன் மூலம் எனது இந்த எதிரியை மிகைத்து நான் நிற்க வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். மனிதனின் அறிவு ஓர் எல்லைக்குட்பட்டதாக இருப்பதால் அவன் தனது விருப்பம் நிறைவேறுதல், எதிரிகளுக்கு உடனடியாக

தோல்வி ஏற்படுதல் ஆகிய இரண்டு உணர்வுகளையும் கொண்டவனாக இருக்கின்றான். அதனால் ஏற்படும் நற்பலன்கள் அல்லது இழப்புகளை அவனால் புரிந்து கொள்ள முடியாது. மனிதன் தனது இந்த விருப்பம் நிறைவேறுவதில் பிடிவாதமாக இருக்கும்போது சில நேரங்களில் அவனது இந்த முயற்சிகளுக்கு நற்பலன்கள் கிடைப்பதற்குப் பகரமாக அதனால் இழப்புகள் ஏற்பட்டு விடுகின்றன. தனது அனைத்து முயற்சிகளையும் செயல்படுத்தி முழுமையாக இதைப் பற்றி சிந்தித்து செயலாற்றிய பிறகும்கூட மனிதனுக்கு தனது முயற்சிகளில் தோல்வி ஏற்பட்டு விடுகிறது.

எனவே, ஒரு மூஃமின் தனது எந்தவொரு பணி நிறைவேறுவதற்கும் தனது விருப்பத்தைச் சார்ந்து நிற்கக்கூடாது. மாறாக, மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்துள்ள அந்த இறைவனிடத்தில், நேரான வழியில் நம்மை நடத்துகின்ற அந்த இறைவனிடத்தில், இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் என்ற துஆவை கற்றுத் தந்துள்ள இறைவனிடத்தில் அந்த மனிதன் இதற்காக உதவி கேட்க வேண்டும். குறிப்பாக மார்க்க விவகாரங்களில் அந்த இறைவனிடத்தில்தான் நாம் உதவி கேட்க வேண்டும்.

**முஜீப்** – துஆக்களுக்கு பதில் தரக்கூடியவன் ஆக இருக்கின்ற அந்த இறைவன் நமது துஆக்களை ஏற்றுக்கொள்பவனாக இருக்கின்றான். துஆக்களை கேட்கின்ற அந்த இறைவன் முன்னால் மனிதன் குனிய வேண்டும். அல்லாஹ்வே! மறைவானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்கின்ற அனைத்தையும் பற்றிய முழுமையான அறிவு உனக்குத்தான் இருக்கின்றது. நீ என்னை நேர்வழியில் நடத்துவாயாக. எனது துஆவை கேட்பாயாக. நீ உன் தரப்பிலிருந்தும் எது உனது பார்வையில் சிறந்ததாக இருக்கின்றதோ எதை எவ்வாறு நீ விரும்புகிறாயோ அதை எனக்கு அவ்வாறே வழங்குவாயாக என்று துஆ செய்ய வேண்டும்.

ஒரு மூஃமின் தனது ஒவ்வொரு பணியின்போதும் துஆவின் மூலமாக இறைவனின் உதவியைக் கேட்க வேண்டும். இவ்வாறு உதவி கேட்கும்போது அல்லாஹ் அவருக்கு அதற்கான வழியையும் காட்டி விடுகின்றான்.

ஆனால், சில நேரங்களில் துஆ செய்த பிறகும், இறைவனிடமிருந்து சில சைகைகள் கிடைத்த பிறகும் மனிதன் இறைவனது நாட்டத்தை அனுமானித்து புரிந்து கொள்வதில் தவறிழைத்து விடுகின்றான். இறைவனது மற்ற சில சைகைகளைச் சார்ந்து நின்றவாறு இதில்தான் வெற்றி கிடைக்கும் என்று அவன் நினைக்கின்றான். ஆனால், அந்த சைகைகள் வேறு ஒரு நோக்கத்திற்காக காட்டப்பட்டதாக இருக்கின்றது. அல்லது அந்த சைகையில் குறிப்பிடப்பட்டவை வேறு ஒரு சமயத்தில் நிறைவேறக்கூடியதாக இருக்கும். ஆனால், மனிதன் அந்த சைகைகளை வேறு விதமாக பார்த்து அதற்கேற்ப தனது பணிகளைச் செய்ய முயற்சிகளை செய்கின்றான். ஆனால், அல்லாஹ் தனது அடியார்களை இழப்புகளிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்கின்றான். அந்த அடியான் இவ்விஷயத்தில் தவறிழைத்த பிறகும் அல்லாஹ் எப்படிப்பட்ட சூழ்நிலைகளை அதற்குப் பிறகு ஏற்படுத்துகின்றான் என்றால் அதற்குப் பிறகு நடக்கும் சம்பவங்களிலிருந்தும் அல்லாஹ்வின் விருப்பம் இதுவல்ல என்பது தெரிய வரும்.

உங்களுக்கு இவ்விஷயத்தில் அதிகமான விருப்பம் இருந்தும் இறைவன் இந்த பணியை வேறு ஒரு சமயத்தில் முழுமையாக செய்து முடிக்க வேண்டும் என்று விதித்திருக்கின்றான். இந்தப் பணி நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக ஜமாஅத்தின் முன்னேற்றத்துடன் தொடர்புடைய பணிகள் கண்டிப்பாக நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால், இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ளான். எனவே, இது இறைவனால் விதிக்கப்பட்டதாகும். இது நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை. ஜமாஅத் என்ற அளவில் நாமும் நாம் சார்ந்திருக்கும் இந்த ஜமாஅத்தும் எண்ணற்ற இறை அருள்களைப் பெற வேண்டியது உள்ளது என்பதிலும் சந்தேகமில்லை. பிறகு இந்த அருள்கள் ஒரு புதிய மகிமையுடன் மீண்டும் எல்லா இடங்களிலும் பரவிவிடும்.

இன்ஷா அல்லாஹ். அதன் மூலம் முழு உலகிலும் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான வழி தென்படும். ஆனால், அது நடைபெறும் நேரத்தை அல்லாஹ்தான் நிர்ணயம் செய்வான். அவனது திருப்திக்கேற்ப செயல்பட்டவாறு துஆ செய்தவாறு நமது பணிகளை செய்வது நமது கடமையாகும்.

இந்த வருடம் கிலாஃபத் ஜுப்ளியின் வருடமாக இருப்பதால் ஒவ்வொரு அஹ்மதியிடமும் ஒரு புத்துணர்வு காணப்படுகிறது. பல்வேறு நாடுகளில் ஆண்டு மாநாடும் நடைபெற்று முடிந்து விட்டது. இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றது. காதியானின் ஆண்டு மாநாடும் டிசம்பர் இறுதியில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் கலந்து கொள்ள முழு உலகிலும் அஹ்மதிகள் மிகுந்த உணர்வுடன் முயற்சிகளை செய்துள்ளார்கள். அதற்கான தயாரிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

ஆனால் கடந்த சில நாட்களுக்கு முன் அநியாயக்காரர்கள் மும்பையில் நடத்தியுள்ள தீவிரவாத தாக்குதல்களின் விளைவாக அவர்கள் முழு நாட்டிலும் ஒரு அமைதியின்மையை உருவாக்கி விட்டார்கள். இதில் எந்த நபர் பிடிபட்டுள்ளாரோ அவர் மூலமாக நடைபெற்ற விசாரணையைப் பற்றி இங்குள்ள தொலைக்காட்சி சேனலும் பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டுள்ளன. அதை வைத்துப் பார்க்கும் போது இந்த அநியாயக்காரர்கள், இந்த செயலில் பங்கு பெற்றுள்ளவர்கள் தங்களது கொடுமைகளை மேலும் பரப்புவதற்கு தான் முயற்சிகளைச் செய்வார்கள் என்பது தெரிய வந்திருக்கின்றது. அதன் காரணமாக அரசாங்கமும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இன்றைய நாட்களில் இங்கு நிலவும் இந்த சூழ்நிலைகளின் காரணமாக இந்தியாவிற்கு வெளியிலிருந்து வரும் அஹ்மதிகள் இங்கு வருவதை நான் தடை செய்துள்ளேன். எவ்வித விதிவிலக்குமில்லாமல் நான் மீண்டும் தெளிவாக கூறுகின்றேன். நீங்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வரவேண்டாம். அல்லாஹ் சூழ்நிலைகளை சிறந்த முறையில் மாற்றுவான். அதற்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் நீங்கள் இங்கு வருவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.

நமக்கு இப்படிப்பட்ட போதனைதான் வழங்கப்பட்டுள்ளது. துஆவும் இவ்வாறே கற்றுத் தரப்பட்டுள்ளது. அதாவது எப்போதும் சோதனைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் தப்பிப்பதற்காக துஆ செய்ய வேண்டும். அப்படிப்பட்ட சோதனைக்குரிய இடங்களிலிருந்தும் நாம் தப்பித்துக் கொள்ள வேண்டும். இங்குள்ள நகரத்தில் வாழ்பவர்கள் இங்கேயே இருக்கின்றார்கள். ஆனால், வெளிநாட்டிலிருந்து பயணம் செய்து வரக்கூடியவர்களின் சூழ்நிலை வேறு விதமாக இருக்கும். எவ்வாறிருப்பினும் நாம் துஆ செயது கொண்டிருக்க வேண்டும் என்ற போதனையே நமக்கு தரப்பட்டிருக்கின்றது. இயற்கை சீற்றங்களிலிருந்து தப்பிக்க வேண்டுமென்றாலும் அதற்கான துஆ இருக்கின்றது. அநியாயக்காரர்கள் உருவாக்குகின்ற குழப்பங்களிலிருந்து தப்பிப்பதற்குரிய துஆக்களும் இருக்கின்றன.

பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்ட பிறகு, பல்வேறு மக்களுக்கு அல்லாஹ் முதலிலேயே கவலையளிக்கக்கூடிய ஆன்மீகக் காட்சிகளைக் காட்டிய பிறகு (சிலர் இத்தகைய ரூஹ்யா – ஆன்மீகக் காட்சிகள் தொடர்பாக முதலிலேயே எனக்கு கடிதம் எழுதியிருந்தார்கள். இப்போது அதிகமாக இது தொடர்பான கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன – ஹுஸுர்.) உலகின் பலருக்கும் இது தொடர்பான கனவுகள் காட்டப்பட்ட பிறகு, பல்வேறு நாடுகளிலிருந்தும் இது தொடர்பான கடிதங்களைப் பெற்ற பிறகு நானும் துஆ செய்த பிறகுதான் வருபவர்களை வர வேண்டாம் என்று தடை செய்துள்ளேன்.

நமது ஒவ்வொரு பணியும் நமது உணர்வுகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். இதனால் உலகம் இது தொடர்பாக என்ன பேசும்? எவ்வாறெல்லாம் பரிகாசம் செய்யும்? என்ற எண்ணங்களை உள்ளங்களிலிருந்து வெளியேற்றியவாறு நமது பணிகள் அமைய வேண்டும். ஒவ்வொரு அஹ்மதியின் உயிருக்கும் மதிப்பு இருக்கின்றது. காரணமில்லாமல் தங்களைத் தாங்களே துன்பங்களில் ஆழ்த்திக்

கொள்ளத் தேவையில்லை. பலருக்கும் இதனால் அவர்களது உணர்வுகளுக்கு காயம் ஏற்படுவதால் கடுமையான துன்பத்தை அவர்கள் உணர்வார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அல்லாஹ் தனது அடியார்கள் மீது அருள் செய்பவனாக இருக்கின்றான் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மனித பலவீனத்தின் காரணமாக நாம் ஒரு தவறான தீர்மானத்தை எடுக்க நினைத்தாலும் சூழ்நிலைகள் பிறகு நடக்கும் சம்பவங்கள் ஆகியவற்றின் மூலமாக அல்லாஹ் நம்மை எந்த வழியில் கொண்டு வருகின்றான் என்றால் அதன் மூலமாக நாம் சரியாக சிந்திப்பதற்கும் சரியான தீர்மானத்தை எடுப்பதற்குமான வழிகாட்டல் நமக்கு கிடைக்கின்றது.

சோதனைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் தப்பிப்பதற்காக துஆ செய்யும்படி நான் கூறியிருந்தேன். இதற்கென்று பல நபிமொழியிலுள்ள துஆக்கள் இருக்கின்றன. இவ்வாறு அல்லாஹ் திருக்குர்ஆனிலும் நமக்கு துஆக்களை கற்றுத் தந்துள்ளான். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்துள்ள துஆக்களும் இருக்கின்றது. இப்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்துள்ள ஒரு துஆவை உங்கள் முன் வைக்கின்றேன். அந்த துஆ இதுவாகும்.

**அவூது பிவஜ்ஹில்லாஹில் அழிமில்லதி லய்ஸ ஸய்யுன் அஃளமு மின்ஹு வபி கலிமாத்தில்லாஹித் தாமத்தில்லதி யுஜாபிஸீஹுன்ன பர்ருன் வலா ஃபாஜிருன் வபி அஸ்மாயில்லாஹில் ஹுஸ்னா மா அலிம்து மின்ஹா வமா லம் அஃலமு மின்ஹா மின் ஸர்ரி மா ஹலக வ ஸரஅ வ பரஅ.**

நான் மகத்தான மகிமையுள்ள எனது இறைவனின் அடைக்கலத்தின்கீழ் வருகின்றேன். அவனைத் தவிர மிகுந்த மகிமையுள்ள வேறு எந்த பொருளும் இல்லை. மேலும் நான் முழுமை பெற்ற அந்த வசனங்களின் அடைக்கலத்தின் கீழிலும் வருகின்றேன். அதிலிருந்தும் எந்த நல்லவரும் தீயவரும் வரம்புமீறி சென்று விட முடியாது. அந்த இறைவன் படைத்து பரவச் செய்துள்ள எல்லா படைப்பினங்களின் தீமையிலிருந்தும் எனக்கு தெரிந்த அல்லது தெரியாத அல்லாஹ்வின் அனைத்து அழகிய பண்புகளின் மூலமாகவும் அவனது அடைக்கலத்தை வேண்டுகின்றேன்.

இதில் விண்ணிலும் மண்ணிலுமுள்ள எல்லா தீங்குகளிலிருந்தும் தப்பித்தவாறு இறைவனின் அடைக்கலத்தின்கீழ் வருவதற்கான துஆ இருக்கின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு துஆவும் இரத்தின சுருக்கமாக இருப்பதுடன் பல அருள்களை ஒன்றுசேர்க்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

அல்லாஹ் நமது துஆக்களை ஏற்றுக் கொள்வானாக. ஒவ்வொரு அஹ்மதியையும் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக. பிறகு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் செய்த ஒரு துஆவை அல்லாஹ் திருக்குர்ஆனில் இடம்பெறச் செய்துள்ளான்.

**ரப்பி இன்னீ லிமா அன்ஸல்த்த இலய்ய மின் கைரின் ஃபகீர்** – என் இறைவா! நீ எனக்கு வழங்குகின்ற ஒவ்வொரு நன்மைக்கும் நான் தேவையுடையவனாக இருக்கின்றேன். (28:25)

அல்லாஹ்விடமிருந்து எப்போதும் நமக்கு நன்மைகளே கிடைத்துக் கொண்டிருப்பதற்காக இந்த துஆவையும் நாம் செய்ய வேண்டும்.

இந்த துஆக்களை எல்லா நேரமும் நாம் செய்து வர வேண்டும். அல்லாஹ் எப்போதும் தனது அருள்களையும் நன்மைகளையும் நமக்கு வழங்கி வருவானாக. எல்லா விதமான தீமைகளிலிருந்து தீங்குகளிலிருந்தும் அவன் நம்மை காப்பாற்றுவானாக. நமது விருப்பங்களை சரியான திசையில் அவன் வைப்பானாக. தவறான அனுமானத்தின் காரணமாக எப்போதாவது இறைவனின் தூதுச் செய்தியை நாம்

புரிந்து கொள்ள முடியாமல் போனாலும் அல்லாஹ் தனது அருளால் மட்டும் இதன் தீய விளைவுகளிலிருந்தும் நம்மை காப்பாற்றுவானாக. நுட்பமான ஞானத்துடன் செயல்படாமல் இறைவனது திருப்திக்கும் நாட்டத்திற்கும் எதிராக செயல்படுபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்காமலிருப்பானாக. நுட்பமான ஞானத்துடன் செய்யப்படும் தீர்ப்புகளும் அல்லாஹ்விடமிருந்து இறங்குகின்ற நன்மைகளில் ஒரு மிகப்பெரும் அருட்கொடையாக இருக்கின்றது. அல்லாஹ் நமக்கு **ரப்பி ஹப்லீ ஹுக்மன் வஅல்ஹிக்னீ பிஸ்ஸாலிஹீன்** (26:84) என்ற துஆவையும் கற்றுத் தந்துள்ளான். இதன் பொருள் என் இறைவா! எனக்கு ஞானத்தை வழங்குவாயாக! என்னை நல்ல மக்களுடன் சேர்ப்பாயாக என்பதாகும். ஹிக்மத் என்பதற்கு மிக விரிவான பொருள் இருக்கின்றது. அல்லாஹ்விடமிருந்து எந்த தூதுச் செய்தி கிடைத்தாலும் அதை மனிதன் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்ற கருத்தும் இந்த சொல்லில் அடங்கியிருக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனின் இருப்பு தொடர்பாக நமக்கு புரிய வைத்துள்ளார்கள். ஒவ்வொரு பணிக்காகவும் அவன் முன்னால் குனிய வேண்டும் என்பதையும் அவனது தூதுச் செய்தியைப் புரிந்து கொள்ளும்படியும் நமக்கு போதனை செய்துள்ளார்கள். அல்லாஹ் எப்போதும் நம்மை இதில் நிலைநிற்கும்படி செய்வானாக. நமது ஒவ்வொரு முடிவும் ஞானம் நிறைந்ததாக இருக்க வேண்டும். அல்லாஹ்வின் நாட்டத்தைப் புரிந்து கொண்டு செயல்படும் வகையில் நமது முடிவு இருக்க வேண்டும். இதுதான் உண்மையான மூஃமினின் அடையாளமாகும். மூஃமினின் தொலைநோக்குப் பார்வையும் இப்படித்தான் இருக்கும். அவர் ஒவ்வொரு அம்சத்தையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

மூஃமின் ஒருபோதும் பயப்படக்கூடாது. நிச்சயமாக ஒரு மூஃமின் தைரியசாலியாக இருப்பார். ஆனால், எந்த விஷயத்தில் நமக்கு பலன் இருக்கின்றது? அல்லது எதில் நமக்கு அதிகமாக நன்மை இருக்கின்றது? எதில் நமக்கு அதிகமான இழப்புகள் இருக்கின்றது என்பதைப் பற்றி கண்டிப்பாக சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் நாம் எந்த தியாகங்கள் செய்வதற்காகவும் அஞ்ச மாட்டோம். ஆனால் ஏதாவதொரு இடத்தில் தீங்கு தென்படும்போது அது ஒரு மூஃமினுக்கும் ஜமாஅத்திற்கும் நற்பலனைத் தராத ஒன்றாக இருந்தால் அதிலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். பல கனவுகள் மூலமாக சில சைகைகள் நமக்கு காட்டப்பட்டதில் விரிவான ஏற்பாடுகளுடன் ஆண்டு மாநாடு ஒருவேளை நடைபெறாமல் போகலாம் என்பதைப் பற்றி அல்லது அந்த சைகைகளில் வேறு சில எச்சரிக்கைகள் இருந்தன.

எவ்வாறிருப்பினும் நாம் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் நமது இந்த முடிவில் சிறந்த நல்விளைவுகளை ஏற்படுத்துவானாக. நமது ஒவ்வொரு பணியும் ஜமாஅத்திற்கு நற்பலனைத் தரக்கூடியதாக இருக்கட்டும். அல்லாஹ் ஜமாஅத்தின் மீது அளவற்ற அருள்களைப் பொழிவானாக. ஆண்டு மாநாட்டில் வர விரும்பியவர்கள் வர முடியாததால் உணர்வு ரீதியாக அவர்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பமானது மேலும் அவர்களுக்கு இறைவனுடனுள்ள தொடர்பு உறுதியாவதற்கான ஒரு வழியாக அமையும் விதத்தில் அதனை அவர்களது துன்பங்களுக்கு ஆறுதல் தரக்கூடியதாக அல்லாஹ் ஆக்குவானாக. ஈமானிலும், நிச்சய உறுதியிலும் ஒவ்வொரு அஹ்மதியும் முன்னேற்றமடையும்படி அல்லாஹ் செய்வானாக. துஆக்களின் பக்கம் முன்பை விட அதிகமாக அவர்களது கவனம் இருக்கட்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நிச்சயமாக இறைவன் கருணைகாட்டக்கூடியவனாகவும், பரிவுடன் நடந்து கொள்பவனாகவும் மென்மையானவனாகவும் இருக்கின்றான். அவன் துஆ செய்பவர்களை வீணாக்கமாட்டான்.

எனவே, எப்போதும் நமது ஒவ்வொரு துன்பத்திற்குப் பிறகும் நாம் முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் முன்பு குனிபவர்களாக இருக்க வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று சிறந்த ஒரு சூழ்நிலை உருவாகும்போது அல்லாஹ் நமக்கு ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கான தவ்ஃபீகை வழங்குவான். காதியானில் வாழ்கின்ற அஹ்மதிகளுக்காகவும் இங்குள்ள அஹ்மதிகளுக்காவும் துஆ செய்யுங்கள். உலகில் வாழ்கின்ற அஹ்மதிகளை உங்களது துஆக்களில் நீங்கள் நினைவு கூற வேண்டும். இந்தியாவில் வாழ்கின்ற அஹ்மதிகள் தங்களுக்காகவும் துஆ செய்ய வேண்டும். இங்கு வாழும் மக்களுக்காகவும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கொடுமையிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பானாக. உலகம் தன்னைப் படைத்த இறைவனை அறிந்து கொள்ளட்டும். மனிதன் மற்ற மனிதனின் உரிமைகளை நிறைவேற்றக்கூடியவர்களாக இருக்கட்டும். மார்க்கத்தின் பெயரால் அல்லது தனது சொந்த பலன்களுக்காக இழைக்கப்படும் கொடுமைகளில் ஈடுபட்டுள்ள அனைவரையும் அல்லாஹ் தனது பிடியின்கீழ் கொண்டு வருவானாக. அவர்களை படிப்பினைக்குரிய முன்மாதிரியாக அல்லாஹ் ஆக்குவானாக. பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்கும் பலவகையில் இழப்புகள் இருந்து வருகிறது. அல்லாஹ் அவர்களது இந்த நிலையை அகற்றி விடுவானாக.

ஒவ்வொருவரையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. அல்லாஹ் உலகிலுள்ள ஒவ்வொரு நபரையும உண்மையான மனிதத்தன்மையில் நிலைநிற்கும்படி செய்வானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL HADI, DELHI**

**ON 05.12.2008**

Translated by : **Maulavi M. RAFEEQ AHMAD H.A.**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**